**நவம்பர் - 13**

**"உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்." - மத் 6 . 8.**

ஆகையால் கர்த்தரிடத்திற்கு ஏறெடுக்கிற நம்முடைய விண்ணப்பங்களும் நம்முடைய வேண்டுதல்களும், நம்முடைய கூக்குரல்களும், இருதயத்தின் பரிசுத்தத்திற்காகவும், அவருடைய ஆவியினால் நிரப்பப்படுதலுக்காகவும், ஆவிக்குரிய ஆகாரத்திற்காகவும், இளைப்பாறுதலுக்காகவும், பலத்திற்காகவும் இருக்க வேண்டும். இயற்கையான காரியங்களுக்காக நாம் மேற்கொள்கின்ற வழியையும், கிறிஸ்தவர்களாக நம்முடைய மிகச் சிறந்த நலனுக்கு எது தேவையாயிருக்கும் என்றும் அவர் அறிந்திருக்கிறார். இதை அவரிடம் விட்டுவிட வேண்டும். அவர் நமக்குக் கொடுக்காத காரியங்களுக்காக அவரிடம் பிடிவாதமாகக் கேட்கிறதைக் காண அவர் விரும்பமாட்டார். ஏனென்றால், அப்படிச் செய்வது அவரிடத்தில் கொண்டுள்ள விசுவாசத்தின் திருஷ்டாந்தமாகாது, ஆனால் எதிரானதாக இருக்கும். அதாவது, நமக்குத் தேவையான பொருள்களைக் கொடுக்க அவர் அருளியிருக்கிற வாக்குறுதியை அவர் மறந்துவிட்டார் என்றோ, அல்லது புறக்கணிக்கிறார் என்றோ, உள்ள சந்தேகத்தின் திருஷ்டாந்தமாகவோ, பயத்தின் வெளிப்படுத்துதலாகவோ இருக்கும். **- Z ’04, 90 (R 3337)**

உலகப்பிரகாரமான காரியங்களும், பரலோகத்துக்கடுத்த காரியங்களும் நமக்குத் தேவைப்படுகின்றன. ஆனால், அவைகளைக் குறித்த விவரங்கள் நாம் தெரிந்து கொள்ளவில்லை. எந்த ஒழுங்கில், எந்த நேரத்தில், எந்த இடத்தில், எந்த விதத்தில் இந்த தேவைகள் நம்முடைய நன்மைக்காக இருக்கக் கொடுக்கப்படலாம் என்றும் நாம் அறியோம். ஆகையால், அவைகள் கொடுக்கப்படுவதைக் குறித்து கர்த்தருக்குத் திட்டமான வழியை காட்டுவதை நாம் தவிர்க்க வேண்டும். அவைகளின் விவரங்களையும், எப்படி, எப்பொழுது, எங்கே அவைகளின் கொடுக்கப்பட வேண்டுமென்பதையும் தேவன் அறிந்திருக்கிறார் என்று நமக்குத் தெரிந்திருப்பதே போதுமானதாக இருக்கிறது. அவைகளைக் கொடுக்க அவருக்கு இருக்கிற இஷ்டத்தைக் குறித்து சந்தேகப்படவும் கூடாது. ஏனென்றால் உலகப்பிரகாரமான பிதாக்கள் பிள்ளைகளுக்கு இரக்கப்படுவதைவிட அதிகமாய் அவர் நம்முடைய பிதாவாக நம்மிடம் இரக்கம் காண்பிக்கிறார். ஆகையால் நமக்காகவுள்ள அவருடைய முன்னேற்பாடுகளில் நன்றியுள்ளவர்களாகவும், திருப்தியுள்ளவர்களாகவும் இருந்து அவரை நோக்கிக் காத்திருப்போமாக. **- P `30, 183.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**சங் 38:9; 69:17-19; 139:2; மத் 6:32-34; லூக் 11:13; யோவா 16:23,24; பிலி 4:6,19; 1யோவா 5:14,15.**

**கோபுர வாசிப்பு** : **Z `15, 38 (R 5623).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் என்ன நிகழ்ச்சிகள் என் பேரிலுள்ள தேவனுடைய கிருபையைக் காட்டின? இந்த வாரத்தில் நான் நம்பிக்கை உள்ளவனாயிருந்தேனா? அல்லது கவலை உள்ளவனாயிருந்தேனா? எது உதவியாக அல்லது இடையூறாக இருந்தது? அந்த அனுபவங்களிலிருந்து நான் கற்றுக்கொண்ட பாடங்கள் எவை?**